# 2018 கார்த்திகை மாதத்திற்கான இறைவேண்டல் மற்றும் நடுநிலை செபத்திற்கான கைக்கொடுத்தல்

***"கிறிஸ்துவோடு இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டீர்கள். அவரோடு இணைந்து வாழுங்கள். அவரில் வேரூன்றியவர்களாகவும் அவர் மீது கட்டியெழுப்பப்பட்டவர்களாகவும் இருங்கள்"*** (கொலோசியர் 2:6-7)

இயேசுக்கிறிஸ்து ஆண்டவர் எமக்கு மாத்திரமல்ல, முழு மனித சமுதாயத்திற்கே மீட்பினை உரிமையாக்கிக் கொடுத்த வெற்றியின் நாயகனாவார். புபுது மக்களாகிய நாம் அவரை எமது வாழ்வின் ஒரே ஆண்டவராக ஏற்றுக் கொண்டு இறை அரசிற்காக அர்ப்பணமாகி வாழ்வதற்கு தீர்மானம் எடுத்துள்ள மக்கள். புனித பவுலடிகளார் எமக்குக் கூறுவது போல் நாம் ஆண்டவருக்குள் வேரூன்றி நிற்பதற்கு உறுதியோடு இருக்க வேண்டும். அவ்வாறு இருக்க வேண்டுமாயின் நாம் அவரோடு இணைந்து இருக்க வேண்டும். அப்படி இல்லாவிடில் அதனால் ஏற்படும் பிரதி விளைவுகளுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டி வரும். ஆதலால் இறைவேண்டலின் ஊழியர்கள் என்றவகையில் இந்த மரித்தோருக்கான மாதத்தில் முழுமையாக கிது தன புபுதுவ மக்கள் மாத்திரமல்ல திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் எனும் அருட்சாதனங்களைப் பெற்றுள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் மரணத்தினின்று உயிர்த்தெழுந்து இயேசுக்கிறிஸ்து ஆண்டவரே இணைந்து வாழ்வதற்குத் தேவையான தூய ஆவியானவரின் வல்லமை வேண்டி செபிப்போம்.

அவ் வண்ணமே இம் மாதம் முழுவதும் உத்தரிக்கிற ஸ்தலத்தில் துன்புறும் ஆன்மாக்களுக்கு இறைவனை முகமுகமாய் சந்திக்கும் பாக்கியம் கிடைக்க வேண்டுமென்று மன்றாடுவோம்.

"நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்கு கிறிஸ்து கடவுளின் வலப் பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவைபற்றி அல்ல. மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள்" (கொலோசையர் 3:1-2)

**முதலாம் வாரம் :-** தியான வாசிப்பு கொலோசையர் 2:6-10

வேண்டுதலுக்கான விசேட நோக்கு:-

இயேசுக்கிறிஸ்து ஆண்டவரோடு இணைந்திராமல் வேறு பலவித தெய்வங்களின் உதவியை நாடி வேண்டும் அனைத்து கிறிஸ்தவர்களுக்காக (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்:-

- சுவாமி அப்பாவுக்காக
- இறைவேண்டல் குழு, துணையாளர் குழு உட்பட புபுதுவயில் பொறுப்பேற்றிருக்கும் அனைவருக்காகவும்
- மாதத்தின் முதலாம் ஞாயிறு நடைபெறும் சங்கம குடும்ப தினத்திற்காக
- கார்த்திகை 10, 11ந் திகதிகளில் தலைமைத்துவமேற்றுறிருக்கும் அனைவருக்காக ஸ்ரீ பிரங்சாராமையில் நடைபெறும் செப பாசறை சம்மேளனம் மற்றம் அதன் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்.

- உத்தரிக்கிற ஸ்தலத்தில் துன்புறும் ஆன்மாக்களுக்காக
- ஏனைய வேண்டுதல்கள்……

**இரண்டாம் வாரம் :-** தியான வாசிப்பு கொலோசையர் 3: 1-11

வேண்டுதுக்கான விசேட நோக்கு :-

உத்தரிக்கிற ஸ்தலத்தில் உள்ள ஆன்மாக்களின் விடுதலைக்காக வேண்டி (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்

- பிரசங்சாராமயில் செப மேடை நிறுவுவதற்கு தேவையான பண உதவி கிடைக்கும் பொருட்டு
- கார்த்திகை 17 சனிக்கிழமை பிரசங்சாராமயில் நடைபெறும் வீரத்தாய்மாரின் ரெலிக்காக
- புபுது அச்சகத்தின் வேலைகள் போன்று தூய ஆவியானவரின் பயண சஞ்சிகையை பகிர்ந்தளிக்கும், எழுதும், தயாரிக்கும் அனைவருக்காகவும்.
- புபுது ஒலி, ஒளி சேவையில் ஈடுபடும் அனைவருக்காகவும்
- தொலைபேசி, லெப்டொப், கணணியை முன்கொண்டு தொலை தொடர்புகளில் ஈடுபட்டு ஆபாசங்களுக்கு அடிமையாகி வீணாகிப் போகும் இளைஞர், சிறுவர்களின் வாழ்விற்காக
- கார்த்திகை 17-18 நாட்களில் பிரங்சாராமயில் நடைபெறும் இளைஞர் கூட்டத்திற்காக
- ஏனைய வேண்டுதல்கள்…..

**மூன்றாம் வாரம்** தியானவாசிப்பு:- 1யோவான் 4: 13-21

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-

பரிசுத்த பாப்பரசர் உள்ளிட்ட அனைத்து ஆயர்கள், குருக்கள் துறவறத்தார் மற்றும் முழுத் திருச்சபைக்காகவும் (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள்

- கார்த்திகை மாதம் 21,22,23,24,25ந் திகதிகளில் பிரசங்சாராமயில் நடைபெறும் பரிசுத்த வேதாகம ஞான ஒடுக்கத்தில் கலந்து கொள்ளும் மக்களுக்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்.
- ஏனைய வேண்டுதல்கள்……

**நான்காம் வாரம்** தியான வாசிப்பு:- 1யோவான் 1:5-10

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :- நாட்டிற்காக (10 நிமிடம்)

வேறுவேண்டுதல்கள்:-

- சுபெந்தி, சபெந்தி, சுமெதி, சுரெந்தி சங்கங்கள் மற்றும் பிரபோதைய குழுவிற்காக
- கார்த்திகை மாதம் 27-29 வரை பிரங்சாராமயில் நடைபெறும் சுரெந்தி சகோதரிகளின் ஞான ஒடுக்கம் மற்றும் வார்த்தையின் ஊழியர்களுக்காக வேண்டி
- ஏனைய வேண்டுதல்கள்…..

**கவனத்திற்கு**

- இறை வேண்டல் குழுக்களில் சம்மந்தப்பட்டோர் மாதத்திற்கு ஒருமுறையாவது குழுவாக ஸ்ரீ பிரசங்சாராமயில் தினமும் நடைபெறும் திவ்விய நற்கருணை நாதர் முன்னிலையில் தொடர் செபத்தில் இணையவும்.
- இறை வேண்டல் குழுக்களில் சம்பந்தப்படக் கூடிய அனைவரும் அந்தந்த மத்திய நிலையங்களில் நடைபெறும் மாதாந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவும்.
- மாதத்தின் எல்லா வெள்ளிக்கிழமைகளையும் செபத்தின், தியானத்தின் தினமாக கழிக்கவும். அன்றைய தினம் எனது மணித்தியாலம், திருப்பலி, தூய ஆவியானவரில் நிரந்தர விழிப்புறுதல், ஐவகை மொழிதல் அனுபவத்தினை முன்வைத்து அமைதியின் நாளாக கழிக்கவும்.

**‘‘தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்’’**
**(திருப்பாடல் 145:18)**

இறைவேண்டல் சேவை